

வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதிக்குட்பட்ட வள்ளிமலை, மேல் பாடி, கொல்லபள்ளி, விண்ணம்பள்ளி, வெப்பாலை, ஸ்ரீபாத நல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 337 பயனாளிகளுக்கு ரூ.9.15கோடி மதிப்பில் வீட்டுமனைபட்டா, மற்றும் நலத்திட்ட உதவிகளை நீர்வளம் – சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கருணாகரன், பொன்னை ரவி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கலைவாணி, ஒன்றிய குழு உறுப்பினர் சுஜாதா, வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கார்கில் வெற்றி!

# வீரர்களின் தியாகம் நம் நினைவை விட்டு நீங்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 28-

“கார்கில் வெற்றி வீரர்களின் தீரமும் தியாகமும் என்றும் நம் நினைவை விட்டு நீங்காது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கார்கில் வெற்றி நாளையொட்டி தமது சமூகவலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

கார்கில் வெற்றி நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கார்கில் வெற்றி நாளில், நமது தாய்மண்ணை ஈடு இணையற்ற மனவுறுதியுடன் காத்து, உயிர்நீத்த துணிச்சல்மிகு இராணுவ வீரர்களுக்கு என் வீர வணக்கங்கள்!**

**அவர்களது தீரமும் தியாகமும் என்றும் நம் நினைவை விட்டு நீங்காது.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### கடலூர் மாவட்டம் திருமுட்டம் ஏரியில் மூழ்கி

# உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 28-**

**கடலூர் மாவட்டம், திருமுட்டம் ஏரியில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் வட்டம், ஸ்ரீ வக்காரமாரி கிராமம், மேட்டுத் தெருவைச் சேர்ந்த செல்வன். அப்துல் ஆசிம் (வயது 12) த/பெ.நிசாருல்லா என்ற சிறுவன் நேற்று முன்தினம் (26.07.2025) காலை சுமார் 10.30 மணியளவில் ஸ்ரீ வக்காரமாரி குன்னத்தேரி என்ற ஏரியில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### வெள்ளகோவில் ஒன்றியம் - முத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் 5 புதிய சாலை மேம்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

*திருப்பூர், ஜூலை 28 -*

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ. மலர்விழி தலைமையில் 24.07.2025வியாழக்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி, அத்தாம்பாளையம் பிரிவில் முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.72.97 இலட்சம் மதிப்பீட்டில் முத்தூர் மூலனூர் சாலை முதல் வள்ளியம்மாள் நகர் வழியாக மோளக்கவுண்டன்வலசு ஆதிதிராவிடர் குடியிருப்பு வரை தார் சாலை மேம்பாட்டுப்பணி, ரூ.51.53 இலட்சம் மதிப்பீட்டில் சேனாபதிபாளையம் முதல் ஒத்தக்கடை நாட்ராயன்கோவில் சாலை வழியாக மயானம் வரை தார்சாலை மேம்பாட்டுப்பணி, பிரதான் மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.49.48 இலட்சம் மதிப்பீட்டில் புஷ்பகிரி குழலிபாளையம் முத்தூர் சாலை முதல் பழனிகவுண்டன்வலசு வரை சாலை மேம்பாட்டுப்பணி, முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் என்.ஜி.எம் சாலை முதல் வேலம்பாளையம் வழியாக அத்தாம்பாளையம் சாலை வரை தார் சாலை மேம்பாட்டுப்பணி, முத்தூர் பேரூராட்சி, தொட்டியபாளையம் வார்டு எண்.5ல் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் மற்றும் கலைஞர் நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் தொட்டியபாளையம் சமத்துவபுரம் குறுக்கு வீதிகளில் உள்ள தார் சாலை பலப்படுத்தும் பணி என மொத்தம் ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தார்சாலை மேம்பாட்டுப் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்து க்குமார், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், நகர கழக செயலாளர்கள் சபரி எஸ்.முருகானந்தம், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.கே.ரவிச்சந்திரன், ஒன்றிய அவைத்தலைவர் தெண்டபாணி, மாவட்ட பிரதிநிதிகள் சிவக்குமார், வெள்ளிங்கிரி, ஒன்றிய இளைஞர் அமைப்பாளர் ஆதவன் ஜெகதீஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அழகரசன், முத்தூர் பேரூராட்சி தலைவர் சுந்த ராம்பாள், வெள்ளகோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராகவேந்திரன், சரவணன் உதவி பொறியாளர் லோகேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை, கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தரங்கம்பாடியில் கலைஞர் பிறந்த நாள் விழா தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன், திருப்பத்தூர் ரஜினி, சின்னமாரியப்பன் சிறப்புரை!

*மயிலாடுதுறை. ஜூலை 28 -*

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூர் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சார கூட்டம் தரங்கம்பாடி காத்தான்சாவடி கடைத் தெருவில் நடைபெற்றது.

தெருமுனைப் பிரச்சார கூட்டத்திற்கு தரங்கம்பாடி பேரூர் கழகச் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா தலைமை தாங்கினார். தரங்கம்பாடி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பாரி.சரவணன் வரவேற்றார். தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரிகுமரவேல், தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் அவைத் தலைவர் எஸ்.கந்தசாமி, மாவட்ட பிரதிநிதியும், தரங்கம்பாடி பேரூராட்சி துணைத் தலைவர் பொன்.ராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதி ஏ.சடகோபன், துணைச் செயலாளர்கள் த.மதியழகன், எஸ்.பால்ராஜ், ச.அம்பிகாபிரபு, பொருளாளர் வி.கண்ணதாசன், ஒன்றிய பிரதிநிதிகள் எம்.வீரமணி, கே.ராஜா, ஏ.கே.சந்துரு, எஸ்.இக்பால், ஜி.செந்தில் குமார், தரங்கம்பாடி பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.சதிஷ்குமார், பி.மணிகண்டன், எஸ்.அமுல்ராஜ், ஏ.ஸ்டாலின், பேரூர் தகவல் தொழில் நுட்ப அணி ஏ.மணிகண்டன், வசந்த், எம்.சித்திரவள்ளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, தலைமைக் கழக பேச்சாளர்கள் திருப்பத்தூர் ரஜினி, சின்னமாரியப்பன், கழக இளம் பேச்சாளர் மா.க.சூர்யா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், அமிர்தவிஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.கபிலன், மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் தரங்கம்பாடி பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்செ. பிரசன்னா நன்றி கூறினார்.



கோவை வடக்கு மாவட்டம், விளாங்குறிச்சி பகுதி, 9வது வார்டு மாகாளியம்மன் திருக்கோவில் அருகில் புதிய திராவிட முன்னேற்றக் கழக அலுவலக கட்டிடம் கட்டுமான பணி கவுண்டம்பாளையம் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி.ஆறுக்குட்டி தலைமையில், விளாங்குறிச்சி பகுதி கழகப் பொறுப்பாளர் க.விஜயகுமார், மாவட்ட துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, வட்ட கழகச் செயலாளர் இரா. மயில்சாமி, மாவட்ட முன்னாள் கவுன்சிலர் அபிநயா ஆறுக்குட்டி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கவுண்டம்பாளையம் தொகுதி பார்வையாளர், கழக மாணவரணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் மூலனூர் எஸ். கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சமூக நீதி, மாநில சுயாட்சி உள்ளிட்டவைகளுக்கு

# நாடாளுமன்றத்தில் குரலெழுப்ப வாய்ப்பு வழங்கிய முதல்வருக்கு நன்றி!

## மாநிலங்களவையில் மு.சண்முகம் பேச்சு!

*புதுடெல்லி, ஜூலை 28 -*

சமூகநீதி, மாநில சுயாட்சி போன்றவற்றிற்கு நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க வாய்ப்பு வழங்கிய தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி என்றும் ஒடுக்கப்பட்டவர்களின் - தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி என்றும் மாநிலங்களவை உறுப்பினர் விடைபெறும் நிகழ்வில் மு.சண்முகம் உரையாற்றினார்.



நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடைபெறும் நிகழ்வில் சில வார்த்தைகள் சொல்ல எனக்கு ஒரு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி.

என் சிறு வயதிலிருந்தே, சுயமரியாதை இயக்கத்தால் நான் ஈர்க்கப் பட்டேன். தந்தை பெரியாரின் போற்றுதலுடன் என் வாழ்க்கையைத் தொடங்கினேன், என் பள்ளி நாட்களில் அவரைச் சந்தித்தேன். உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, நான் இந்திய ராணுவத்தில் சேர்ந்தேன், சீன ஆக்கிரமிப்பு மற்றும் பாகிஸ்தான் போரின் போது பணியாற்றினேன்.

ராணுவத்தில் ஒரு குறுகிய சேவைக்குப் பிறகு, எனது அரசியல் வாழ்க்கை, சமூக சேவை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடங்கினேன். கடந்த 45 ஆண்டுகளாக, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை (திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிலாளர் பிரிவு) என்ற தொழிற்சங்கத்தில் பணியாற்றி வருகிறேன். எங்கள் சகாக்கள், முன்னாள் தலைவர்கள் மற்றும் பொதுச்செயலாளர்களின் அனைத்து முயற்சிகளாலும், அது மத்திய தொழிற்சங்கமாக விரிவுபடுத்தப்பட்டது. இப்போது, 19 மாநிலங்களில் எங்களிடம் ஏராளமான தொழிற்சங்க அலுவலகங்கள் உள்ளன

தொழிலாளர் நிலை க்குழுவின் உறுப்பினராக, நான் அதிக பங்களிப்பு களைச் செய்ய விரும்பி னேன், தொழிலாளர் நிலைக் குழுவை நோக்கமுள்ள தாகவும் சக்திவாய்ந்த கண்காணிப்பு அமைப்பாகவும் மாற்ற விரும்பினேன். இருப்பினும், நேரமின்மை மற்றும் வரையறுக்கப்பட்ட தொடர்பு மற்றும் விவாதங்கள் காரணமாக, உறுப்பினர்கள் விரும்பினாலும், குழுவால் அதிகம் வழங்க முடியவில்லை.

இந்த மகத்தான அவையில் தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த எனக்கு வாய்ப்பளித்த எங்களது தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் நண்பரும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவரும் எனது நலம்விரும்பியான திரு. திருச்சி சிவா மற்றும் பிற உறுப்பினர்களின் வழிகாட்டுதலின் கீழ், நான் திறம்பட செயல்பட முடிந்தது, மேலும் பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலனுக்காக குரல் கொடுத்தேன், மேலும் அவர்களின் வேலைப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் EPF-95 திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை அதிகரிப்பதன் அவசியத்தை அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இந்தியா ILO-வில் உறுப்பினராக இருந்தாலும், சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் கூட்டுப் பேரம் பேசும் உரிமைக்கான தீர்மானத்தை தொழிலாளர்களின் அடிப்படை உரிமையாக இன்னும் அங்கீகரிக்கவில்லை.

நமது மாபெரும் திராவிடத் தலைவர் பேரறிஞர் அண்ணா, மாநில சுயாட்சி, கூட்டாட்சிக் கொள்கைகள், சமூக நீதி போன்றவற்றின் மீது உருக்கமான உரைகளை நிகழ்த்திய இந்த மாண்புமிகு அவையில், முக்கியமான பிரச்சினைகளை எழுப்பி உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்று சொல்வதில் பெருமை கொள்கிறேன்.

மக்களின் முக்கியமான பிரச்சினைகளை எழுப்புவதற்கும், ஒடுக்கப் பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சமூக நீதி மற்றும் தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய எனது அனைத்து சக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்பு கிறேன். மாண்புமிகு மாநிலங்களவை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் மற்றும் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மற்றும் மாநிலங்களவை செயலாளர் மற்றும் அவரது முழு குழுவினருக்கும் நன்றி தெரிவிக்க விரும்பு கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பிரதமர் யோஜனா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 28 -*

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் எழுப்பிய கேள்விகள் வருமாறு

1. பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா கிராமின் (PMAYG) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இது வரை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

2. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் மாநிலத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது மற்றும் அதற்காக அடையாளம் காணப்பட்ட பயனாளிகள் எத்தனை பேர்?

3. வீடுகள் கட்டுவதில் தாமதம் ஏதேனும் ஏற்பட்டிருந்தால் அதற்கான காரணங்கள் என்ன மற்றும் இந்த செயல்பாட்டை விரிவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?



4. இந்த திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நிலத்தை அடையாளம் காண்பதில் அல்லது அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதில் அரசாங்கம் ஏதேனும் சவால்களை எதிர்கொண்டதா?

5. அவ்வாறு சவால்களை எதிர்கொண்டு இருந்தால் அத்தகைய பிரச்சனைகளை தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

6. தமிழ்நாட்டில் இத்திட்டத்தை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் அதை அடைவதற்கான காலக்கெடு என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.



கழக சட்ட துறையின் சார்பில் வழக்கறிஞர் அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் DLC சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் CLC ஆகியோர்களுக்கு பயிற்சி பாசறை சட்ட துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பினை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து கழக சட்ட துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலை உரையற்றினார். தொடர்ந்து மாநில திட்ட குழு துணை தலைவர் டாக்டர் ஜெயரஞ்சன், செயற்கை நுண்ணறிவு பற்றி தனசேகர் சேசாத்ரி ஆகியோர் உரை ஆற்றினார்கள். தொடர்ந்து கழக சட்ட துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ, வழக்கறிஞர் அணி நிர்வாகிகளுக்கு 2026 ஆண்டு நடைபெற இருக்கின்ற பொது தேர்தலில் கழக வழக்கறிஞர்கள் எவ்வாறு செயல் பட வேண்டும் என்று விரிவாக உரை ஆற்றினார். இந்த பயிற்சி வகுப்பானது காலை 10 மணி முதல் மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. இந்த பயிற்சி பாசறையில் 234 சட்டமன்ற தொகுதியின் ஒருங்கிணைப்பாளர்கள் 76 கழக மாவட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் சட்ட துறையின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் சட்ட துறையின் இணை செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.எம்.தண்டபாணி, சு.ராதாகிருஷ்ணன், பி.ஆர்.அருள்மொழி, இரா.தாமரைச்செல்வன், ஜெ.பச்சையப்பன், சூர்யா வெற்றிகொண்டான், சட்ட துறையின் துணை செயலாளர்கள் கே.சந்துரு, பெ.ரகு, டாக்டர் சந்திரபோஸ், என்.மருதுகணேஷ், எஸ். ராஜா முகம்மது, தலைமை கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ. சரவணன், வீ.கவிகணேசன், கே.மறைமலை, சுவை சுரேஷ், எஸ்.எஸ். மனோஜ், தினேஷ், எம்.எஸ்.பி.வீரமணி, மீஞ்சூர். சுரேஷ், கலாநிதி ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.